மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை
இந்திய அரசு
புதுதில்லி - 110 003
தொலைபேசி: 011-24369191, 24329191 தொலைநகல்:011-24363858

.................

செ.வெ.எண்: .888 **செய்தி குறிப்பு** நாள்: .9-10-10

**தொலை தொடர்புத்துறை அமைச்சர் ஆ.இராசா ரஷ்யா செல்கிறார்**
**இரு நாடுகளுக்கிடையே தொழில்நுட்ப உறவுகள் குறித்து ஆலோசனை!**

மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ.இராசா அரசு முறை பயணமாக 10.10.2010 (ஞாயிறு) அதிகாலை ரஷ்யா புறப்படுகிறார். 15.10.2010 வரை ஐந்து நாட்கள் மாஸ்கோ மற்றும் பீட்டர்ஸ்பர்க் நகரங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் அவர் இரு நாடுகளுக்கிடையிலான தகவல் தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் பகிர்ந்து கொள்வது குறித்தும், தொலை தொடர்புத்துறையில் பாதுகாப்பு அம்சங்கள் (Security measures) குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

ரஷ்யாவின் தொலை தொடர்புத்துறை அமைச்சர் திரு. இகோர் செகோலேவ் அவர்களுடன் நடைபெற இருக்கும் பேச்சு வார்த்தையில் இரு நாடுகளுக்கான தொலை தொடர்பு சம்மந்தமான ஒப்பந்தங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் இறுதி செய்யப்படுகின்றன.

பின்னர், மாஸ்கோவில் இயங்கி வரும் அவசர கால தொலை தொடர்பு (Emergency Communication Centre) என்ற மையத்தை பார்வையிடும் அமைச்சர் அங்குள்ள பாதுகாப்புத்துறை அதிகாரிகளோடு போர் உள்ளிட்ட அவசரகால தகவல் சேமிப்பு மற்றும் பகிர்வு, தடைபடாத தகவல் சேவை உள்ளிட்ட பல்வேறு பொருள்களில் விவாதிக்கிறார்.

ரஷ்யா நாட்டின் மிக உயர்ந்த தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனமான ஸ்கோல் கோவோ ஆராய்ச்சி மையத்தோடு (Skolkova Innovatia Centre) இந்தியாவில் இணைந்து அமைக்க விரும்பும் தகவல் தொழில் நுட்ப பூங்கா குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இந்தியாவில் தொலைத் தொடர்புத் துறையில் முதலீடு செய்துள்ள 'சிஸ்டமா' நிறுவனத்தை பார்வையிடும் அமைச்சர், அந்நிறுவன அதிகாரிகளோடு கலந்துரையாடுகிறார்.

இவை அன்னியில், ரஷ்ய நாட்டின் தகவல் தொழில்நுட்ப கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும் பார்வையிட்டு, அங்குள்ள தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி அறிஞர்களோடும் கலந்துரையாடியபின் 16.10.2010 அதிகாலை நாடு திரும்புகிறார்.

அமைச்சரோடு துறை உயர் அதிகாரிகள் கொண்ட குழுவும் செல்கிறது.

(இ.நடராஜன்)
அமைச்சரின் கூடுதல் தனிச் செயலாளர்

E. NATARAJAN
Addl. Private Secretary to
Minister of Communications
& Information Technology
Government of India
New Delhi.